ஏறாவூர் நகர சபை - 2022

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஏறாவூர் நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏறாவூர் நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஏறாவூர் நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஏறாவூர் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது ஏறாவூர் நகர சபையின செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள 5 தொலைத்தொடர்பாடல் கோபுரங்களுக்கான வியாபார உரிமக்கட்டண வருமானம் ரூபா 30,000 நிதிக்கூற்றுக்களில் நிலுவையாக காட்டப்பட்டிருக்கவில்லை. | நாட்குறிப்பு பதிவினூடாக 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆண்டுக்கான வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும் |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 52,525,635 பெறுமதியான 06 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி கட்டடங்கள் பொறி, மோட்டார் வாகனங்கள், தளபாடங்கள் போன்ற நிலையான சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிடுவதற்கும் வாகனங்களின் உரிமையை மாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சொத்துக்களுக்கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக்கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) | | | |
| (i) | பிரிவு 44, 46 & 49 மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளரின் 2013 யூலை 10ஆந் திகதிய கடித இல. BT/ACLG/PL/Road/2013 | அனைத்து வீதிகளையும் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து வீதிகளையும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அனைத்து வீதிகளையும் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 170 (1) & (2) ஆம் பிரிவுகள் மற்றும் நகர சபை ஒழுங்கு விதிகளிலுள்ள (அத்தியாயம் III) 54(3) ஆம் இலக்க விதி | ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவையைக் கொண்ட சோலை வரியினை செலுத்தியிருக்காத 50 ஆதன உரிமையாளர்களிடமிருந்து சோலை வரி நிலுவையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023ஆம் ஆண்டில் ஆதனவரி நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது | சோலைவரி நிலுவையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | உபபிரிவு 171 | வியாபார உத்தரவாத கட்டண நிலுவை மற்றும் விறாந்து கட்டண நிலுவை ஆகியவற்றை நகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் முறையான அனுமதியுடன் பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் பிரகாரம் முறையான அனுமதியுடன் பதிவழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசாங்க நிதி ஒழுங்குவிதி 371 | சபையில் 1988 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் அண்டு வரையிலும் முற்பண நிலுவைகளாக காணப்படுகின்ற தொகைகளை உரியவர்களிமிருந்து அறவீடு செய்வதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்கள் தற்போது அடையாளப்படுத்தப்பட்டு பதிவழிப்பதற்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | முற்பணக் கொடுப்பனவுகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 1915 இன் 15 ஆம் இலக்க வீடமைப்பு மற்றும் நகர மேம்பாட்டுக்கான கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19 மற்றும் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான கையேட்டின் அத்தியாயம் 04 இன் பிரிவு 4.2 எ | மீளாய்வாண்டில் 15 கட்டட விண்ணப்பங்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரையின்றி கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | 1915 இன் 15 ஆம் இலக்க வீடமைப்பு மற்றும் நகர மேம்பாட்டுக்கான கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தப்படுகின்றது. | சட்டத்தின் பிரகாரம் சுகாதாரம் மற்றும் சுற்றாடல் தொடர்பான பரிந்துரை பெறப்பட்ட பின்னரே கட்டட அனுமதி வழங்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 8,726,921 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 12,946,800 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | **2022** | | | | **2021** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 11,311,941 | 11,877,209 | 12,035,594 | 20,632,517 | 9,358,200 | 8,308,200 | 5,918,057 | 20,790,901 |
| வாடகைகள் | 14,130,400 | 4,898,114 | 4,580,713 | 5,973,759 | 2,611,100 | 107,300 | 107,300 | 5,656,359 |
| அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 3,650,000 | 2,754,705 | 2,754,705 | -- | 5,050,000 | 2,669,210 | 2,669,210 | -- |
| ஏனைய வருமானம் | 27,589,466 | 104,341,012 | 97,998,214 | 9,661,378 | 117,108,000 | 59,218,693 | 58,730,386 | 3,318,581 |
| | **56,681,807** | **123,871,040** | **117,369,226** | **36,267,654** | **134,127,300** | **70,303,403** | **67,424,953** | **29,765,841** |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| | 2013 ஆம் ஆண்டு முதல் 15 எண்ணிக்கையான கோழி இறைச்சிக் கடைகளுக்கான கழிவகற்றல் வரி நிலுவைத் தொகையான ரூபா 322,500 மற்றும் தமாஷா வரி நிலுவைத் தொகையான ரூபா 177,856 கடந்த 05 வருடங்களாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், மாட்டிறைச்சிக் கடை வாடகை நிலுவைத் தொகையான ரூபா 483,979 இனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஆவணங்களின்மை காரணமாக நீதிமன்றம் மூலமாக சட்ட நடவடிக்கை முடியாமலுள்ளது. எனவே குறித்த தொகையை பதிவழிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைத் தீர்வைகள்** | | |
| (i) | மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன முறையே ரூபா 7,993,590 மற்றும் ரூபா 6,036,000 ஆகும். | பதில் இல்லை | முத்திரைக் கட்டண மற்றும் நீதிமன்ற தண்டப்பண வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | சான்றிதழ்கள் பொருந்தாமை மற்றும் வங்கியில் வைப்பு செய்தமைக்கான ஆவணங்கள் இல்லாமை காரணமாக, மீளாய்வாண்டின் இறுதிவரை கிடைக்கப்பெறவேண்டிய கடந்த 05 ஆண்டுகளுக்கான முத்திரைத் தீர்வைக் கட்டணத் தொகையான ரூபா 3,201,500 இனை மீளப்பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் இல்லை. | முத்திரைக் கட்டண வருமானங்களை உரிய காலப்பகுதிகளில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | சபையினால் அனுமதியற்ற கட்டடம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு வட்டார உத்தியோகத்தர்கள் 04 பேர் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளமாக ரூா 850,525 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அனுமதியின்றி கட்டப்பட்ட 09 கட்டடங்கள் தொடர்பாக சபையினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இதற்காக வட்டார உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு தகவல்கள் திரட்டப்படுகின்றது. | அனுமதியற்ற கட்டடங்கள் தொடர்பாக தண்டப்பண அறவீட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) அதிகாரமளிக்கப்படாத அலுவலகக் கட்டிடத்தின் நிர்மாணம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சுற்றாடல் அதிகாரசபை என்பவற்றிடமிருந்து முன் அங்கீகாரம் பெறப்படாமை காரணமாக இக்கட்டிடம் அங்கீகரிக்கப்படாத கட்டிடமொன்றாக கருதப்பட்டிருந்தது. இதன் விளைவாக, உரிய அதிகாரசபை இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கும் போது சபையானது தண்டப்பணம் செலுத்த வேண்டியிருக்கும். | இது தொடர்பான ஆவணங்கள் கொழும்பிலுள்ள தேசிய சுவடிகள் காப்பக திணைக்களத்திலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. ருனுயுஇ சுனுயு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியவற்றிடமிருந்து அனுமதி பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சுற்றாடல் அதிகாரசபை என்பவற்றிடமிருந்து அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | பாராளுமன்ற பொதுக்கணக்கு குழுவினால் வரையப்பட்ட தேவைக்கு மேலதிகமாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடப்பகுதிக்கான காரணம் இதுவரை விளக்கமளிக்கப்படாததுடன், குறிப்பிட்ட கட்டடத்தின் இரண்டாம் மாடியின் மேல் தளம் பூரணமாக மேற்கொள்ளப்படாததினால், நீர்க்கசிவு ஏற்பட்டு பாவனைக்கு உட்படுத்த முடியாமல் காணப்படுகின்றமை, கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கட்டிடத்தின் குறைபாடுகள் மற்றும் அரச சொத்து மோசடி தொடர்பிலும் அறிக்கையிடப்பட்டுள்ளது. இவ்வேலைக்கான நிதி கிடைக்கப்பெறும் போது வேலைகள் பூர்த்தி செய்யப்படும். | கட்டட நிர்மாணத்தினை பூரணமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | பாராளுமன்ற பொதுக்கணக்கு குழுவினால் வினவப்பட்ட குறிப்பிட்ட கட்டடம் தொடர்பான Comprensive Report சுமார் 06 ஆண்டுகளுக்கு மேலாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த அறிக்கையானது, மட்டக்களப்பு கட்டடங்கள் திணைக்களத்தின் பிரதம எந்திரியிடமிருந்து கிடைக்கப்பெற்றதும் அனுப்பி வைக்கப்படும். | கட்டடம் தொடர்பான Comprensive Report பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | குறிப்பிட்ட கட்டட நிர்மாண மேற்பார்வை வழிநடத்தல் தகுதி வாய்ந்த பொறியியலாளரினால் அல்லாமல் தனியார் நிறுவன மேற்பார்வையாளரினால் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மேற்படி வேலைகளானது அரச கொள்கைகள் மற்றும் தொழில் தர்மங்களுக்கு எதிராகவும், அரச நிதியினை வீணடித்து தனது சுய இலாபங்களுக்காக அதனை தவறான முறைகளினுடாக அனுமதித்து பெற்றுக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்ற சந்தேகமே நிலவுகின்றது. | கட்டட நிர்மாண வேலைகள் தகுதிபெற்ற பொறியியலாளரினால் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். மேலும், இழப்பீடுகளை உரிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இவ்வொப்பந்த காலம் முடிவடைந்து 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும், ஒப்பந்த வாடகைப் பணம் பெறப்படாத நிலையிலும் இக்கலாச்சார நிலையத்தை சபை மீளவும் பொறுப்பேற்று வாடகைக்கு வழங்க சபை நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலும், சபைக்கு இதுவரை ரூபா 2,204,000 இழப்பு ஏற்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தை முடிவுறுத்தி வாடகைகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சொத்துக்களைப் பயன்படுத்தி வருமானங்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையில் பழுதடைந்து காணப்படுகின்ற 04 ளவாகனங்களை திருத்துவதற்கும் மற்றும் பயன்படுத்த முடியாமல் காணப்படுகின்ற 04 வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையில் திருத்தப்படாதுள்ள 04 வாகனங்களை திருத்துவதற்கும், பயன்படுத்த முடியாமல் காணப்படுகின்ற 04 வாகனங்களை கூறு விலைக்குட்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | வாகனங்களை திருத்துவதற்கும், பயன்படுத்த முடியாத வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். |

**3.3 செயற்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2001 ஆம் ஆண்டின் சராசரியாக ரூபா 10 மில்லியன் செலவில் கட்டி முடிக்கப்பட்ட 64 கடைத் தொகுதிகளைக் கொண்ட பிரதான வீதியில் அமைந்துள்ள சந்தைக் கட்டட தொகுதி இதுவரை மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டு வாடகை வருமானம் எதுவும் பெறப்படாது மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. | தற்பொழுது LDSP வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த சந்தை கட்டடத்தொகுதியில் மீன் சந்தை நிர்மாணப்பணிகள் முடிவுற்ற பின்னர் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டு சபையினால் வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | சொத்துக்களைப் பயன்படுத்தி வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்** | | |
| (i) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையில் காணப்படும் 19 பதவிகளுக்கு 41 வெற்றிடங்களும், 06 ஊழியர்கள் மேலதிகமாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இதனை சீர்செய்வதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடம் தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்கான கோரிக்கையினை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிக ஊழியர்களை சீர் செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்களுக்கான இடர் கடன் வழங்கும் போது அவர்களது சேவைக் காலத்திற்குள் மீளப்பெறக்கூடிய வகையில் மீளச்செலுத்தும் காலம் கணக்கிடப்பட வேண்டும். எனினும், மேற்குறிப்பிட்ட விடயத்தை கவனத்தில் கொள்ளாமல் கடன் வழங்கப்பட்டு ஓய்வு பெற்றுச் சென்ற 05 உத்தியோத்தரகள் மற்றும் தொழில் வறிதாக்கப்பட்ட 02 உத்தியோத்தர்களின் கடன் நிலுவை ரூபா 261,914 மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாமல் நிலுவையாகக் காணப்படுகின்றது. | ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் தொழில் வறிதாக்கப்பட்ட ஊழியர்களிடமிருந்து கடன் நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஊழியர் கடன் நிலுவைகள் அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டின் பிரகாரம், சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த 43 நடவடிக்கைகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படும். | பாதீட்டின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், சபையில் உள்ளகக் கணக்காய்விற்கென உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் இடம்பெற்றமைக்கான அறிக்கைகள் காணப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 4.3 சுற்றாடல் பிரச்சினைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 1988 இன் 56 ஆம் இலக்க சட்டத்தினாலும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டத்தினாலும், 2008 இன் 01 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் 2022 சனவரி 27ஆம் திகதியிடப்பட்ட 2264/18 ஆம் இலக்க விஷேட வர்த்தமானியின் "ஆ" பிரிவின் பிரகாரம் விலங்கறுமனை | விலங்கறுமனை மற்றும் திண்மக்கழிவு நிலையத்துக்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்கான வேலைகள் படிப்படியாக இடம் பெற்ற வண்ணம் உள்ளன. | சட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் திண்மக் கழிவு நிலையத்திற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | வர்த்தமானி அறிவித்தல் இல. 2264/18 இன் பிரகாரம் பகுதி ‘ஈ’ பிரிவில் ஹோட்டல்கள் அல்லது உணவு விடுதிகள் உணவு தயாரிக்கும் இடங்கள் அல்லது உணவு பரிமாறுதல் சேவைகள் போன்ற 92 நிறுவனங்களுக்கு சுற்றாடல் உரிமப் பத்திரம் வழங்குவது தொடர்பில் அல்லது அவர்களின் நிறுவனத்தினை முறையாக களப்பரிசோதனை செய்வதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு சிலர் மாத்திரமே சுற்றாடல் உரிமப் பத்திரம் கோரி விண்ணப்பித்துள்ளனர். அவர்களுக்கு உரிமம் வழங்குவது தொடர்பான களப்பரிசோதனை நடவடிக்கை தற்போது இடம்பெற்று வருகின்றது. | சுற்றாடல் அனுமதிப் பத்திரங்கள் உரியவாறு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |